## 15 மணிநேர இலவச ‘கிண்டி’

வாரத்தில் 15 மணிநேரமும் வருடத்திற்கு 40 வாரங்களும் இலவச ‘கிண்டி’ கிடைக்கும். மழலையர் பள்ளிக் கல்வியானது வெவ்வேறு சேவைகளில் வெவ்வேறு வழிகளில் வழங்கப்படுகிறது. சில சேவைகளுக்கு, 15 மணிநேர இலவச ‘கிண்டி’ இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு வழங்கப்படலாம், அத்துடன் கூடுதல் கவனிப்பிற்கு தனிக் கட்டணம் செலுத்தப்படும். ஒரு குழந்தை நீண்ட பகல்நேர பராமரிப்பு அமைப்பில் ‘கிண்டி’ வகுப்புகளில் கலந்து கொள்வதாயின், கூடுதல் கவனிப்பின் ஒரு பகுதி ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் குழந்தை பராமரிப்பு மானியத்தால் செலுத்தப்படக்கூடும்.

